செ.வெ.எண்: 75 நாள்: 29.06.2016

## பத்திரிகைச்செய்தி

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அனைத்து நீதியரசர்களின் 16.06.2016 தேதிய கூட்டத்தில் வழக்குரைஞர்கள் சட்ட பிரிவு 34(1)ல் தேவையான மாற்றங்கள்/திருத்தங்கள் குறித்த யோசனைகளை பரிந்துரைக்க ஐந்து நீதியரசர்களை கொண்ட குழு அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையில் மாண்புமிகு திரு.நீதியரசர் எஸ்.மணிக்குமார், மாண்புமிகு திரு.நீதியரசர் நாகமுத்து, மாண்புமிகு திரு.நீதியரசர் ராஜுவ்சக்தேர், மாண்புமிகு திரு.நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷ் மற்றும் மாண்புமிகு திரு.நீதியரசர் பி.என்.பிரகாஷ் ஆகிய ஐந்து மாண்புமிகு நிதியரசர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்குழு வழக்குரைஞர் சங்கங்களுக்கு இதுகுறித்து அறிவிப்பு வழங்கி, வழக்கறிஞர் சங்கங்களின் பிரதிநிதிகளை கேட்டு, வழக்கு சட்ட பிரிவு 34(1)ல் தேவைப்படும் மாற்றங்களை / திருத்தங்களை பரிந்துரைக்கும் என்ற விபரம் உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை சென்னை உயர்நீதிமன்ற தலைமை பதிவாளர் திரு.தி.ரவீந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**